# 3-ம் ஈழப் போரை நடத்த படையினர் தயாரா?

## — 'சண்டேரைம்ஸ்' கேள்வி

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 5 இதழ் 70
யாழ்ப்பாணம் |செவ்வாய்க்கிழமை 18-04-1995

(கொழும்பு)
மூன்றும் கட்ட ஈழப் போரை நடாத்துவதற்குப் படையினர் தயாராக இருக்கின்றனரா? என்பது இப்பொழுதுள்ள மிகப் பெரிய கேள்வியாகும் என 'சணடே ரைம்ஸ்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சண்டே ரைம்ஸ்' இது பற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது; விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது அரசியல் பயிற்சி பெறும் பாடமாகும். அவர்களுடன் போரில் ஈடுபடுவது இராணுவப் பயிற்சி பெறும்
(6ம் பக்கம் பார்க்க)

★ தடை நீக்கப்பட்ட

## பொருட்கள் அனைத்தும் வடபகுதிக்கு அனுமதி

]கொழும்பு[
அரசினால் தடைசெய்யப்பட்ட எட்டு பொருட்களைத் தவிர மற்றைய பொருட்களை தாண்டிக்குளம் இராணுவ முகாம் ஊடாக வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு சோதனை முகாமில் உள்ள படையினர், நேற்று முன் தினம் முதல் அனுமதி வழங்கினார்கள் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை இதுபற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது; கற்பூரம், பெற்றோல், டீசல் என்பன படைகளால்
(5ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படையினர்

# போருக்கான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்!

## கரிகாலன் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

"அரசுக்கும் – விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்து பேச்சுக்கள் நடைபெற்றுவரும் இவ்வேளையிலும் இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்தில்போரை நோக்கிய செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது"

தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு.கரிகாலன் நேற்று நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் இன்றைய நிலை பற்றி திரு. கரிகாலன் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்குமாகாணத்தில் படையினர் தமது முகாம்களையும், சோதனைச்சாவடிகளையும்நாளுக்கு நாள் பலப்படுத்திக் கொண்டே இருக்கின்றார்கள். மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் இராணுவத்தினர் வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் இரவு-பகலாக இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

### இராணுவ சிவில் நிர்வாகம்

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்று ஏதும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள ராணுவத் தலைமையகங்கள் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்று தாங்களே சட்டத்தைப்போட்டு அமுல்படுத்தி வருகின்றன.

இதனால் எமது போராளிகளின் நடமாட்டத்தையும், பொது மக்களின் நடமாட்டத்தையும் கட்டுப்படுத்தி ஒரு இராணுவ கெடுபிடிக்குள்ளே தற்போதும் வைத்திருக்கிறார்கள்.

இதுபற்றி அரசபிரதிநிதிகளுடன் நாம் நடாத்திய ஒவ்வொரு கட்டப் பேச்சுக்களிலும் சுட்டிக்காட்டிய போதிலும் இப்பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு அரசு எந்த ஒரு முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை,

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக, படுவாங்கரைப்பகுதி, வாகரைப்பகுதி போன்ற இடங்கள் அனைத்திலும் இராணுவம் ஒரு சிவில் நிர்வாகத்தை நடாத்தி வருகின்றது. பிரகடனப்படுத்தப்படாத ஒரு பொருளாதாரத் தடையைவிதித்து பொதுமக்களை மிகவும் இம்சைக்குள்ளாக்கி வருகின்றது.

### கிழக்கில் இராணுவ தர்பார்

கிழக்கு மாகாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறிவருகின்றார். ஆனால்தியாகி அன்னை பூபதியை நினைவுகூறும் நிகழ்ச்சிகளுக்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடைபெற்ற கூட்டங்கள், ஊர்வலங்களை படையினர் குழப்பியதுடன், அதில் பங்குபற்றிய பொதுமக்களையும் தாக்கியுள்ளார்கள். இவற்றையெல்லாம் நாம் பார்க்கும்போது இராணுவம்
(6-ம் பக்கம் பார்க்க)

### பிரிகேடியரின் தந்திரம்

போராளிகள் தமக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் போது இராணுவம் சும்மா இருகின்றது. ஆனால் பொது மக்கள் பொருட்களை எடுத்துச் செல்லும் போது சோதனைச் சாவடிகளில் வைத்து பறிமுதல் செய்வதுடன் பொதுமக்களை தாக்கியும் துன்புறுத்தியும் வருகின்றது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் வியாபாரம் செய்து வரும் பெண் ஒருவரிடம் ஒரு சோதனைச் சாவடியில் வைத்து கிரினேட் ஒன்றைக் கொடுத்து அதை மறைத்துக் கொண்டு மற்றொரு சோதச் சாவடி ஊடாகக் கொண்டு செல்லும்படி
(6-ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு–கிழக்கு

## மக்களின் புனர்வாழ்வுக்கு $76\frac{1}{2}$ கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)
வடக்கு - கிழக்குப்பகுதிகளில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு வரவு செலவுத்திட்டத்தில் 76 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கப்பல் போக்குவரத்து துறைமுகங்கள், புனர்வாழ்வு புனரமைப்புஅமைசசு இதனைத்
(5ம் பக்கம் பார்க்க)

அன்னை பூபதி நினைவு தினம்:

## கோட்ட ரீதியாக அடையாள உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்]
தியாகச் சுடர் அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவின் இறுதி நாளாகிய நாளை 19-ம் திகதி புதன்கிழமையன்று யாழ். மாவட்டத்தில் கோட்ட ரீதியாகப் பகலில் அடையாள உண்ணாவிரதங்களும், மாலையில் நினைவுப் பொதுக்கூட்டங்களும் நடைபெறவுள்ளன
(6-ம் பக்கம் பார்க்க)

க. பொ. த. [சா/த] பரீட்சை:

## பெறுபேறுகளை மீளாய்வு செய்ய விண்ணப்பங்கள் கோரல

(கொழும்பு)
அண்மையில் வெளிவந்த க. பொ. த. சாதாரணதர பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கு பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி மே மாதம் ஐந்தாம் திகதியாகும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை மே மாதம் 5-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்ப படிவங்கள் 30 X 20 சென்றி மீற்றர் அளவில் விண்ணப்பதாரிகளால் தயாரிக்கப்பட வேண்டும். பெறுபேறுகளில் குறிப்பிடப்
(6ம் பக்கம் பார்க்க)

ஐக்கிய அரபுக் குடியரசில்

## இல. பணிப் பெண்ணுக்கு மரண தண்டனை

### குழந்தையை குத்திக் கொன்றாராம்

(கொழும்பு)
ஐக்கிய அரபுக் குடியரசில் வீட்டுப் பணிப்பெண்ணாக பணியாற்றிய இலங்கைப் பெண்மணி ஒருவருக்கு அவர் தமது முதலாளியின் மகளைக் கொலை செய்தார் என்ற காரணத்துக்காக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது-

சிலி மொகமட் பாரூக் எனப்படுகின்ற இந்தப் பெண்மணி கடந்த ஒக்டோபர் மாதம் இந்தக் குழந்தையை கத்தியால் குத்திக் கொன்றதாக ஒப்புக் கொண்டிருந்தார். இதைத்தொடர்ந்து நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கியிருந்தது,
(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


வைத்தியம்

செங்கமாரி (Hepatits) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பிநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, விரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1420)

மணமகன் தேவை

34 வயதுடைய மணப் பெண்ணுக்கு அரசாங்க, தனியார்துறையில் பணி புரியும் மணமகன் தேவை. விபரங்களுக்கு: திருமதி க. க. இராசலட்சுமி, 49, ஆராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். (ஏ-4880)

கண்டெடுக்கப்பட்டது

வடக்கு-கிழக்கு மாகாண சபை பிரதி பிரதம செயலரின் அலுவலகத்தில வேலை செய்யும் கே. ரி. இராஜகுல விரசிங்கம் என்பவருதுடமை சம்பந்தமான கடிதகோவை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—04—18

செவ்வாய் இரவு

8-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
8-20 தியாக தீபம் அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- விவேகானந்தன் எழுதிய ''பாரதத்தம உன்னை மீண்டும் பார்க்கிறோம்'' - இந் நிகழ்ச்சி இன்னும் தொடர்ச்சி நாளைக் காலை இடம்பெறும்.
8-30 செய்திகள்
8-40 கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய ''பசநோந்தி''
8-50 மலரும் மொட்டுகள்

1995—04—19

புதன் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தியாக தீபம் அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- விவேகானந்தன் எழுதிய ''பாரதமே உன்னை மீண்டும் பார்க்கிறோம்''

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—04—18

செவ்வாய் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 தமிழிசை
5-30 வானொலி மதியுகம்-16
6-00 சிந்தனைக்குச் சில விருந்து கள்
6-02 இவ்வாரம் இவர்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 என் தெரிவு
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# ஜனாதிபதியின் செயலரின் சூட்கேசில் போதைவஸ்தா?

(கொழும்பு)

ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளரான பத்மாமகாராஜா அண்மையில் ஜனாதிபதியோடு இந்தியாவுக்கு சென்றிருந்த போது சூட்கேசில் கொண்டுசென்றது போதைவஸ்தா? என்று 'திரிசிங்களே' என்ற பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவர் இந்தியாவில் சென்றபோது ஏதோ ஒரு வித்தியாசமான பொருள் கொண்டு சென்ற படியால் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பரிசோதனை உபகரணங்கள் வித்தியாசமாகச் செயல்பட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் என்ற படியால் அவரது சூட்கேசுகள் பரிசோதனை செய்யப்படவில்லை அதனாலேயே 'திரிசிங்களே' பத்திரிகை இப்படியான ஒரு செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. ம-சி

# 'ஆகாஷ' ஏவுகணையை இந்தியா மீண்டும் பரிசோதிக்கும்

(புதுடில்லி)

இந்தியா தனது இடைத்தூர ஏவுகணையான 'ஆகாஷ்' எனப்படும் ஏவுகணையை இவ்வாரத்திற்குள் பரிசோதனை செய்யவுள்ளது.

ஒரிஸா மாநிலத்தின் சந்திப்பூர என்னுமிடத்திலிருந்து தரையிலிருந்து விண்ணுக்கு தாவித் தாக்கும் வலிமை கொண்ட இவ் ஏவுகணையை விண்ணில் செலுத்தி பரிசோதிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

1990ல் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்ட 'ஆகாஷ்' ஏவுகணையை முடிந்தால இவ்வாரமே இரு தடவை பரிசோதிக்கவும் விஞ்ஞானிகள் எண்ணியுள்ளனர். ஏழாவது தடவையாக தற்போது ஆகாஷ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. -இ

# ஐ. தே. க. மேதின பேரணிக்கு தடை அரசின் போக்கிற்கு கண்டனம்

(கொழும்பு)

ஐ. தே. க. வின் மேதின பேரணியை கண்டியில்நடத்த அரசு அனுமதிக்காததற்கு அரசு எம். பி. க்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மக்களின் சுதந்திரமான நடமாட்டம் என்ற பொ. ச. மு. வின் கொள்கைக்கு எதிரான செயலாகவே தாங்கள் இதனைக் கருதுவதாகவும் கூறியுள்ளனர்.

அரசின் இந்த முடிவு ஜனநாயக ரீதியற்றது என இவர்கள் அரசுத் தலைமைப்பீடத்திற்கு தெரிவித்துள்ளதுடன் கண்டியில் தமது மேதினக் கொண்டாட்டத்தை நடாத்த ஐ. தே. க. வினர் அனுமதிக்கப்படவேண்டுமெனவும் கூறியுள்ளனர்.

அரசின் மேற்படி முடிவானது, சிறந்த நடராசக் கருதப்படும் திரு. ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐ. தே. க வின் அரசியல் ரீதியாக பெரும் பிரசாரமாக அமைந்து விடுமெனவும் இவர்கள் எச்சரித்துள்ளனர். (சி)

# மு. காங்கிரஸ் பச்சை கொடி

நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதி ஆட்சி முறையைநீக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசைக் கோரவிருக்கிறது.

நாடாளுமன்றத்துக்கு பதில் சொல்லக்கூடிய ஓர் ஆட்சி முறையை அமுல்படுத்துமாறும் மேற்படி கட்சி அரசைக் கேட்டுக்கொள்ளவும் உள்ளது.

நாடாளுமன்றத் தேர்வுக் குழுவிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இவ்வாரம் அதன் ஆலோசனைகளைத் தெரிவிக்கும்போது மேற்படி முடிவுகளை அது வலியுறுத்தவுள்ளது.

தேர்தல் தொகுதி முறையில் மாற்றங்களை ஏற்படுத்துமாறும் அது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை மேலும் கோரவுள்ளது. -இ

# இடைக்காடு துப்பாக்கி சூடு பலாலிமுகாமில்தீவிரவிசாரணை

(கொழும்பு)

இடைக்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக பலாலி இராணுவ முகாமில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது நடைபெற்று வரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் நோக்குடன் இராணுவத்துக்குள் நடந்த உள்வீட்டு வேலையாக இது இருக்குமோ என அரச உயர் வட்டாரங்களிலும் ராணுவ உயர் நிலைகளிலும் இப்போதும் சந்தேகம் நிலைமையுள்ளதாக கொழும்புப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு விடுதலைப்புலிகளோ காரணமானவர்கள் எனக் கூறினுல் அவர்கள் என்ன நோக்கத்துக்காக இப்படியான ஒரு சம்பவத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம்பற்றி அறிவிக்கப்படும் வரையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரன் கூட இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி அறிந்திருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் பலாலி முகாமில் தோட்டாக்களை எண்ணும் வேலை கூட ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம். அத்துடன் ராணுவ சிப்பாய்கள் பலரும் விசாரணைக்குள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இடைக்காட்டு துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. -இ

# நுளம்புத் தொல்லை

(கொழும்புத்துறை)

பனை வைத்தியசாலையில் தற்போது நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். 154

# சோதிடக்கலை மிகவும் விரிவானது

(யாழ்ப்பாணம்)

சோதிடக்கலை மிகவும் விரிவானது. இக்கலையை நாம் எமது மட்டத்தில் நன்கு புரிந்து கொள்ளவேண்டும் நல்லவர்களுடன் சேர்ந்து நல்லவைகளை தெளிவுபட அறிந்து கொள்ளவேண்டும். நல்லவைகளை அறிந்து கொள்வது மட்டுமல்லாது அதன்படி ஒழுகுவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணம் நாவலர்மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றசோதிடக்கலைக்கல்லூரிஅங்குரார்ப்பண விழாவில பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்டப்பரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. வேலாயுதம் தொடர்ந்து உரையாற்றுகையில்:

நல்லதை எங்கு நடந்தாலும் அதில் நாம் பங்கு கொண்டு எம்மாலான ஆக்கத்தையும், ஊக்கத்தையும், வழஙகவேண்டும் தனிமரம் தோப்பாகாது இந்தவகையில் நாம் எலலோரும் இணைந்து இன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படும் இச் சோதிடக்கல்லூரியை வளர்த்தெடுப்பதற்கு எம்மாலான பங்களிப்புக்களைத் தவறாது செய்து கொள்ளவேண்டும் என்றார். -162

# வடமராட்சியில் புதுவருட தினத்தில் மூவர் தற்கொலை

(நெல்லியடி)

புதுவருட தினமான வெள்ளிக்கிழமையன்று வடமராட்சிப் பகுதியில் மூவர் தற்கொலை செய்து மரணமடைந்துள்ளனர்.

கரவெட்டி அண்ணா சிலையடியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான நாகன் கதிரன் என்பவர் நோயின் கொடுமையால் நஞ்சருந்தியும்,

உடுப்பிட்டியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான மா. இராசேஸ்வரி (வயது 47) என்பவர் கிணற்றில் வீழ்ந்தும்,

குலானை கரவெட்டியைச் சேர்ந்த பொன்னையா இராசேஸ்வரன் (வயது-45) என்பவர் கழுத்தில் சுருக்கிட்டும் தற்கொலை செய்து கொண்டனர்.

இம்மூன்று மரணங்கள் சம்பந்தமாக மந்திகை மருத்துவமனையில் நடைபெற்ற விசாரணைகளின் போது உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. நடராஜா தற்கொலைகள் எனத் தீர்ப்பு வழங்கினுர். -160-சி

# விசர் நாய் கடிப்பதால் உயிர் ஆபத்து ஏற்படும்

விசர்நாய் கடித்தால் உயிரையே இழக்கவேண்டி நேரிடும். நாய்க்கு ,றபீஸ்' என்னும் நோய் வந்தால் அதற்கு வெறி பிடிக்கும்.

இந்நோய் காற்றில் வரும் நச்சு அணுக்களால அதாவது வைரஸ் கிருமிகளால் பரவுகின்றது. காற்றில் வரும் நச்சு அணுக்கள் நாயின் தோலை அடைந்து புண் வழியாக உடலுக்குள் புகுந்து கொள்கின்றன.

நான்கு அல்லது ஆறு வாரங்களில் உடலுள் புகுந்த நச்சுக் கிருமிகள் தனது வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது. இதனுல் அதற்கு வெறி பிடிக்கின்றது.

## விசர் நாயின் நடவடிக்கைகள்

நாய்க்கு ஜுரம் கண்டு, அது அசையாமல் இருக்கும். உணவு உட்கொள்ளாது, இந்நிலையில் நச்சுக் கிருமிகள் அதன் மூளையைப் பாதிக்கின்றபோது நாய் பரபரப்படைகிறது. வாயில் இருந்து உமிழ் நீர் வழியும். இந்நிலையில நாய்க்கு தன்னை வளர்த்தவர் யார் மற்றவர் யார் என்று வித்தியாசம் தெரியாது. இத்தகைய அறிகுறி தென்பட்ட ஐந்தாவது தினங்களில் நாய் இறந்துவிடும்.

விசர்நாய் கடிக்கும்போது அதன் உமிழ்நீரில கலந்துள்ள நச்சுக் கிருமிகள் கடிவாய் வழியாக மனித உடலில் குவிந்து விடும். கடிபட்ட மனிதனுக்கு முதலில் மனத்தளர்ச்சி ஏற்படும். பின் காய்ச்சல் ஏற்படுகின்றது என்ன நடக்குமோ என்ற பயத்தினுல் கடிபட்டவர் கவலையடைகிறர். சிகிச்சை பெற முடியாத வசதியற்ற சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக சிகிச்சை பெறமுடியாதவர்களுக்கு அளவுக்கு அதிகமான மனக்கவலை ஏற்படுகின்றது. இதைத் தொடர்ந்து

(5ம் பக்கம் பார்க்க)

# இன்று

(கொழும்புத்துறை)

அன்னைபூபதி உண்ணவிரதம் பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்றச் சங்கம் சனசமூகநிலைய மண்டப முன்றலில் இன்று 18ம் திகதி செவ்வாய் கிழமை காலை தொடக்கம் மாலை வரை நடைபெறும். 154

### மணிவாக்கு

சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிகளில் சிக்குண்டு அல்லல் உருதீர்கள். சேதத்தைவிட்டு உருவங்களில் வேறுபாடு கருதாது நான் எனது என்னும் சொற்களை விட்டால் இறை வணுகிய அழகனைக் காணலாம்.

- திருவாசகம்

# மோதல் தவிர்ப்புக் காலத்தில் இராணுவத்திற்கு துரித பயிற்சி

(கொழும்பு)

இராணுவத்தினருக்கு விஷேட துரிதப்பயிற்சிகள் தற்போது நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள படை முகாம்களில் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மோதல் தவிர்ப்புகாலத்தை பயன்படுத்தி இந்த துரித பயிற்சிகள் வழஙகப்பட்டு வருகிறது. முன்னர் படைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அவசர அவசரமாக 3மாதகால பயிற்சி வழங்கப்பட்டு யுத்த முனைகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். தற்போதுஇவ்வாறு பல ஆயிரக்கணக்கான படையினருக்கு விஷேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை ஐ. தே. க. அரசாங்கத்தால் முன்னர் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இராணுவ தளபாடங்கள் பகுதி பகுதியாக தற்போது வந்த வண்ணமுள்ளன. பாகிஸ்தான், சீனுவிடமிருந்து இந்த இராணுவ தளபாடங்கள் வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இராணுவத்தில் புனரமைப்புக்களை மேற்கொண்டு வரும் இராணுவ தளபதியும். ஏனைய அதிகாரிகளும் பாதுகாப்புக்காக மேலதிகமாக நிதிஒதுக்கப்படவேண்டுமெனவும் அதற்கான அவசியம் குறித்தும் ஜனதிபதி சந்திரிகாவுக்கும், பிரதிபாதுகாப்பமைச்சர் ரத்வத்தைக்கும் விளக்கிக் கூறியுள்ளனர். இதற்கு ஜனதிபதி இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இராணுவதளபதி ஜெரி டி சில்வாவின் பதவிக் காலத்தை மேலும் இரு வருடங்கள் நீடீத்ததன்மூலம் ஜனதிபதி இராணுவத்தை மேலும் பலப்படுத்து மற்றொரு யுத்தத்திற்காக அவர்களைத் தயார் படுத்தமுயல்வதாகவும் அவதானிகள் கூறியுள்ளனர்.

(சி)

## நமது நோக்கு

### ஒப்பம் இடாதது ஏன்?

குடியியல் அரசியல் உரிமைகள்பற்றிய சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை அரசு இதுவரை கையெழுத்து இடவில்லை என்ற தகவல் வெளிவந்துள்ளது.

வழமைபோல - மூடி மறைக்கப்பட்ட சங்கதிகளில் இதுவும் ஒன்று என்ற விபரம் தற்போது மக்களுக்குத் தெரியவந்துள்ளது.

கருணையைப் போதிக்கும் பௌத்த மதக் கோட்பாட்டைப் பேணிக்காக்கும் நாடு எனச் சர்வதேச அரங்கிற் பிரமாதப்படுத்துகின்றது.

போதனைக்கும் சாதனைக்குமுள்ள வேறுபாடு எத்தகையது என்பதை விளக்க இது ஒன்றே போதாதா?

ஏனெனில் - சாந்தியும்' சமாதானமும் உலகில் நிலவ வேண்டும் என்பதற்காகவே ஐ. நா. சபை அமைக்கப்பட்டது.

அதற்காக - அதன் கீழுள்ள பல நிறுவனங்கள் பல ஒப்பந்தங்களை விவாதித்து விதிகளை ஏற்படுத்தியது.

அந்த உடன்பாடுகளை உறுப்பு நாடுகள் ஒப்பமிட்டு ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஒப்புக் கொண்டால் மனித உரிமைகள் மீறப்படும்போது, தனிநபர்கூட கடிதமூலம் முறைப்பாடு செய்ய முடியும்.

அது மாத்திரமல்ல - அப்படி முறைப்பாடு செய்யப்படும்போது, அந்த நிறுவனம் அதுபற்றி விசாரணை செய்ய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை இந்த ஒப்பந்தத்திற் கையெழுத்திடாத காரணம் என்ன?

ஒப்பந்தத்தை அங்கீகரித்து ஒப்பம் இட்டால் - அரசு பல சங்கடங்களைச் சந்திக்க வேண்டும்.

இங்கு - தன்னிச்சையாகச் செயற்படும் படையினரின் அன்றுட மனித உரிமை மீறலகள் தனிநபர்களாலேயே சர்வதேச அரங்கிற்குப் போனுல், விசாரணைகள் பலவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டும். விளக்கங்கள் கொடுக்க வேண்டும்.

அத்தோடு காரியம் முடிந்து விடுமா? அவை மீண்டும் ஏற்படாதிருக்க பரிகார நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

மனித உரிமைகள் பற்றிப்பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த அரசு தொடர்ந்து ஒப்பம் இடாதது ஆச்சரியமானது தான்!

### புலதும் பத்தும்

#### மிருகப் பால்

மிருகப்பால்என்றதும்... பசு, எருமை ஆகியன தான் எனக்கு நினைவுக்கு வரும் ஆனுல்... வேறு சில மிருகங்களின் பாலும் மனிதருக்கு நன்மைதரும்,

ஊட்டப் பொருட்கள் நிறைய உள்ள யானைப் பால் உடலுக்கு வலிமையையும், உள்ளத்திற்கு உணர்ச்சியையும் கொடுக்கும். கண்ணில் உண்டாகும்நோய்களைப் போக்கி, முகத்திற்கு அழகையும் கொடுக்கும் நல்ல சுவையுடையது; ஆனுல் எளிதிற் செரிக்க மாட்டாதாம்!

உவர்ப்புச் சுவையுள்ள ஒட்டகப்பால் தோல்வியாதிகள், வயிற்றுப் பூச்சிகள், நெஞ்சுச்சளி ஆகியவற்றிற்கு நல்ல மருந்து, ஆனுல்.. மந்தம், வாதம், காதிரைச்சல் போன்ற நோய்களை உண்டாக்கும். அராபியர் இப்பாலைப் பருகுகிருர்கள். நமக்கு... யானை, ஒட்டகப் பால்...? ''கிட்டாதாயின் வெட்டென மற.!..

— மயூரன்

### இராசி பலன்

18-04-1995

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு சித்திரை—05)

திருதியை முற்பகல் 11-46 வரை; அனுஷம் முன்னிரவு 10-55 வரை சித்தயோகம் இராகுகாலம் மாலை 3-03 முதல் 4-33 வரை, சுபவேளை காலை 10-33 முதல் 12-03வரை

மேஷம்: பிறர் துன்பம் கடமை தவறுதல் அலைச்சல்:

இடபம்: சமயோசிதசெயல் தெய்வ தரிசனம். பணவரவு.

மிதுனம்: கடும்சொல் சகோதர உதவி. பயணம்.

கடகம்: முன்கோபம் தடுமாற்றம், தொழில்பகை.

சிங்கம்: குடும்பகவலை வீண் வம்பு அமைதியின்மை.

கன்னி: முதியோர் ஆசி, காரியசித்தி, தியானம்.

துலாம்: அன்னியர் வெறுப்பு, தடுமாற்றம், வழித் தொல்லை.

விருச்சிகம்: பொதுப்பணி, வசதியான மாற்றம் தானதர்மம்.

தனுசு: கீழ்ப்படிதல்,வேலைக்கஷ்டம், பதட்டநிலை.

மகரம்: முயற்சி பலிதம், அதிஷ்டவாய்ப்பு இனசன உதவி.

கும்பம்: கலந்துரையாடல் தாயார் அறிவுரை தெய்வீக செலவு.

மீனம்: முட்டிமோதல், குடும்பப்பிரிவு ஆணவப்பேச்சு.

— ஜோஸ்யர்

# கொழும்பில் முக்கியபகுதிகளில் பாதுகாப்பு பலமடைகிறது

(கொழும்பு)

கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கான பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு வருவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரினுள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச்சேர்ந்த பெருமளவு உறுப்பினர்கள் ஊடுருவி விட்டதாக புலனுய்வுத்துறையினர் எச்சரித்துள்ளதை யடுத்தே மேற்படி கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை சப்புகஸ்கந்த எண்ணை சுத்திகரிப்பு நிலையம் தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு இலக்காகும் அபாயம் இருப்பதாக புலனுய்வுத்துறையினருக்கு கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் அங்குசெலவோரும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்பே அனுமதிக்கப்பட்டு வருகிருர்கள்

தெற்கில் ஜே. வி பி யினரின் அச்சுறுத்தலும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது.

(சி)

# அரசுடனுன இ.தொ.கா. உறவில் பாதிப்புஎதுவும் ஏற்படவில்லை

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்கும் இடையிலான உறவில் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அரசியல் பிரிவின் உப தலைரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி. பி. தேவராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; தோட்ட தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்னைகள் சம்பந்தமாக அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படும். சில வேளைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் சேர்ந்துள்ளது. எமது கோரிக்கைகளை நாம் அரசிடம் வலியுறுத்துவோம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்த 6 அம்சக் கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் இதற்கான நடவடிக்கைகள் விரைவில மேற்கொள்ளப்படும் எனவும் எமக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது, தோட்டத் தொழிலாளரின் பிரச்னைகளை அறிந்து கொள்வதன் மூலம் அவற்றை தீர்த்துவைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இ. தொ. காவிற்கும் அரசுக்குமிடையிலான உறவில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன

க-சி

# இஸ்ரேலிய படையினர் சூடு: 3 பலஸ்தீனியர் உயிரிழப்பு

(ரெல்அவிவ்)

பலஸ்தீனிய மேற்கு கரை நகரமான ஹெப்ரோன் அருகே மூன்று பலஸ்தீனியர்கள் இஸ்ரேல் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மூவரும் இஸ்லாமிய ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த தேடப்பட்டுவரும் உறுப்பினர்கள் என இஸ்ரேல் கூறுகிறது. இஸ்ரேலுக்கும் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்துக்குமிடையில் சமாதான உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர், இஸ்ரேலியர் மீது ஹமாஸ் இயக்கம் தொடராக பல குண்டுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளது.

கொல்லப்பட்ட மூவரும் இருந்த காரின் மீது இஸ்ரேல் படையினர் சரமாரியாக சுட்டபோதே இந்த மூவரும் உயிரிழந்தனர், இவர்கள் இருந்த காரில் வெடிகுண்டுகள் இருக்கலாம் என்ற அச்சத்தில் பின்னர் இந்தக் கார் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து இதற்கு பழிவாங்கப்போவதாக ஹமாஸ் இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது,

-சி

★ பொருளாதாரத்தடை - மீன்பிடித்தடை

# வடபகுதி மீதான தடைநீக்கம்: ஈ.பி.டி.பி. பலத்த கண்டனம்

(கொழும்பு)

வடபகுதி மீதானபொருளாதாரத் தடைநீக்கம் மற்றும் கடல்வலயத் தடையை நீக்கியதற்காக ஈ. பி. டி. பி அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு இணங்கி ஜனுதிபதி சந்திரிகா மேற்படி முடிவை எடுத்தமை தமக்கு அதிருப்தி தருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடபகுதி மக்களின் நாளாந்த தேவையை நிறைவேற்றுவது அரசின் கடமையாகும். இதைவிடுத்து புலிகளின் கோரிக்கைக்காக அவற்றை நீக்குவது பிழையானது என ஈ. பி. டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா சண்டேலீடருக்கு தெரிவித்துள்ளார்.

சமஷ்டித்தீர்வு தொடர்பாக ஏனைய தமிழ்கட்சிகள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்த விடயம் குறித்து அரசு கவனத்தில் கொள்ளவேண்டும் மேலும் அரசு தனது அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் நிபந்தனைகளை கருத்தில் கொள்ளாது கலந்துரையாடவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

-சி

உற்பத்தியைப் பெருக்கிடுவோம்
ஊக்கமாய் உழைத்திடுவோம்

# அரசியல் யாப்புத் திருத்தமானது இனப்பிரச்னைத் தீர்வை பின்போடும்

## குமார் பொன்னம்பலம் கூறுகிறர்

[கொழும்பு]

இன்றைய அரசு கொண்டு வந்திருக்கும் அரசியல் யாப்பு மாற்ற ஏற்பாட்டினுல் தமிழர் பிரச்னைத்தீர்வுக்கு ஏதாவது வழி ஏற்படும் என்று என்னுல் கூற முடியாதுள்ளது. தமிழர் பிரச்னைத் தீர்வை பின் போட்டுக்கொண்டுபோவதற்கு எடுக்கப்படும் ஒரு முயற்சியாகவே இதை கருதுகிறேன்.

இவ்வாறு தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நாடாளுமன்றில் கொண்டு வரப்படவிருக்கும் நகல்யாப்பு பற்றி கருத்துத்தெரிவிக்கையில் கூறினர். அவர் மேலும் கூறிகையில்;

பொ. ச. மு. அரசின் இந்த யாப்பு மாற்றத்தில் தமிழர் பிரச்னைக்கான தீர்வுக்கு வழி பிறக்கலாம் என்று எதிர் பார்த்திருந்த மக்கள் இதனுல் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றுதான் கூறமுடியும்.

நாடாளுமன்றில் தெரிவுக் குழு சமர்ப்பிக்கவிருக்கும் அரசியலமைப்பு மாற்றம் பற்றிய யாப்பின் நகலில் இருப்பவை எமக்கு கவலை தருகிறது. அக்குழுவில் தமிழர்கள் இருந்தும் கூட இனப்பிரச்னைக்கு தீர்வை இந்த அரசு ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையே இல்லாது போய்விட்டது. தமிழர் பிரச்னைக்கு தீர்வு என்ற வகையில் எந்த ஒரு வரியும்அதில் இல்லை

இந்த அரசியல் யாப்பை புதிய அரசு மாற்றியமைப்பதற்கு முக்கிய காரணம் தமிழர் பிரச்னையாக இருக்கலாம் என்றுதான் கருதி வந்தோம். ஆனுல் அதைப் பிரதிபலிக்கும் விதத்தில் ஒரு வரியும் அதில இல்லை இனப்பிரச்னைக்கான தீர்வைபின்போட்டுக்கொண்டு போவதற்கு எடுக்கப்படும் ஒரு முயற்சியாகவே இதை கருதுகிறேன்.

ஏனென்றுல் ஒரு திட்டம் வழி வகுக்கப்பட்டு நகல யாப்பில உள்ளடக்கப்பட்ட விஷயங்களை கட்சிகள் பரிசிலனை செய்து அபிப்பிராயம் தெரிவித்த பின் இன்னொரு முறை கட்சிகளின் கருத்தறிய நேர்முகச் சந்திப்பை ஏற்படுத்துவார்களா என்பது தெரியாது இதுவரை ஒருமுறை மட்டுமே இப்படியான அபிப்பிராயங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆனபடியால இந்தச் சந்திப்பின் பின்பு இந்த நகலில் தமிழர் பிரச்னை பற்றி ஏதாவது உள்ளடக்கப்பட்டால் அவை பற்றிய குறிப்பாக தமிழ் கட்சிகள் விமர்சிக்க இனுமொரு சந்தர்ப்பம் ஏற்படுத்துவார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது

இனப்பிரச்னைக்கு சமஷ்டி முறை தீர்வே உகந்தது என கடந்த ஆறு மாதகாலமாக பேச்சுக்கள் அடிபட்டு வருகின்றன. ஆனுல் இந்த நகல் யாப்பில் அப்படியான தீவை பிரதிபலிக்கத்தக்க யாப்பாக இது அறவே அமையவில்லை; ஆகையால் சமஷ்டி முறையால் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணப்போகிறுர்கள் என்ற கருத்தும் இந்த நகலைப்பொறுத்த மட்டில் கனவாகவே மாறியிருக்கிறது.

இந்த நிலையில் தமிழ் கட்சிகள் முக்கிய பங்கை ஆற்றலாம். ஆனுல் சில கட்சிகள் அரசின் தாளத்திற்கு ஆடுகின்றன. சில கட்சிகள் வெளிப்படையாகவும் வேறு சில கட்சிகள் மறைமுகமாகவும் அரசின் தாளத்திற்கு ஆடுகின்றன. எம்மைப் பொறுத்தவரை இலங்கைத் தீவு முழுவதும் வாழும் தமிழ் மக்கள் பெரும்பான்மையான சிங்கள மக்களோடு பூரண சமத்துவமான பிரஜைகளாக இருப்பார்கள் என்பதை இந்த யாப்பு திட்டவட்டமாக அங்கீகரிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தேசத்தின் கீழ் தமிழர்களும், சிங்களவரும் சந்தோஷமாக வாழமுடியாது தொடர்ந்து சண்டையும் சச்சரவுகளுமே நீடிக்கும். இந்த நிலையில் நாடு பிரிந்து தனிநாடு ஒன்று அமையக் கூடாது என்று பேரின கட்சிகள் விரும்பினுல் 'கொன்பிடரேஷன்' என்ற அமைப்பை முன்வைக்க எமது கட்சி விரும்புகிறது. அதாவது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பூரண சுதந்திரமான நாடுகள் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக ஒன்று சேர்ந்து ஒரு பொது அரசை அமைத்தலாகும்.

இப்படியானஒரு அமைப்பை பிரதிபலிப்பதும ஒரு யாப்பாகத்தான் இருக்கவேண்டும். இந்த அரசியல் முறையில் முக்கிய அம்சம் என்ன வென்றுல் இறைமை மத்திய அரசிடம் இருப்பதில்லை. இறைமை பூரண சுதந்திரமான அந்தந்த நாடுகளிடம் தான் இருக்கும். இந்த முறை இத்தீர்வுக்கு உகந்தமுறை என்று நாம் சொல்லுகின்ற அதேநேரம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் எதுவாக இருக்கவேண்டும் என்பதை தமிழர் தீர்மானிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (சி)

# அன்னைபூபதி பொதுஅறிவுத்தேர்வு - 95 கோட்டமட்ட பரிசில் பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில் கோட்ட மட்டத்தில் பரிசு பெறுவோர் பட்டியல் வருமாறு:

### வேலணைக் கோட்டம்

ஆண்டு—7

இராசரத்தினம் - பிரதாப் சேர். வை து. ம. ம. வி, சுந்தரலிங்கம் - பிறேம்நாத் புங்/கமலாம்பிகை. வி.

ஆண்டு 8

பாலசிங்கம் - ஜெயதீபன், வேலணை கிழக்கு ம. வி.

ஆண்டு—9

பரஞ்சோதி - மகாதீபன் சேர். வை. து. ம. ம. வி.

ஆண்டு—10

நவரட்ணம்-திவாகரன், புங்/கமலாம்பிகை வி, மகேந்திரராசா-உதயதீபன, மண்டைதீவு மகாவித்தி, பத்மனுதன்-பத்மகுமார், புங்/கமலாம்பிகை வி.

ஆண்டு 11

கனகசுந்தரன் - சுதன், மண்டைதீவு மகா வித்தி, திருச்செல்வம்-ரவீந்திரன், சரவணை நாகேஸ்வரி, ரெங்கநாயகி-சிதம்பரநாதன் சரவணை நாகேஸ்வரி.

ஆண்டு—12/13

ரூபகௌரி - சிவராசா, மண்டைதீவு மகாவித்தியாலயம், மதனகௌரி-சிவராசா, மண்டைதீவு மகாவித்தியாலயம்.

### கரவெட்டிக்கோட்டம்:

ஆண்டு 6

திருஞானசுந்தரம்- ஞானதரன், கரவெட்டி விக்னேஸ்வரா வி, கார்த்திகா-இராமச்சந்திரன், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

ஆண்டு 7

கைலாயங்கிரிச்செல்வம்-கௌரிபாலன், உடுப்பிட்டி அ. மி. க, சுபத்திரா-முருகேசு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மதிசோபனு- நாகேந்திரன், கரவெட்டி விக்னேஸ்வரா.

ஆண்டு-8

பேரின்பநாதன்- ராதாபனுளன், உடுப்பிட்டி அ. மி. க, குலசிங்கம்-அருணேதயன், நெல்லியடி மத்திய ம வி, மகேந்திரராஜா- ஜெயந்தன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

ஆண்டு-9

கந்தசாமி - விஜிதரன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, அரியநாயகம் - துஷ்யந்தன், உடுப்பிடி அ மி. கலலூரி, மச்சராசா-இன்பரூபன், உடுப்பிட்டி அ! மி. கல்லூரி.

ஆண்டு—10

தேவராஜா-பிறின்ஸ் பிரதீபன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, நடராசா-முகுந்தன். நெல்லியடி மத்திய ம. வி.

ஆண்டு-11

மகேந்திரன் - ரமணன், இமையாணன் அ. த. க. பா, சிவசுப்பிரமணியம்-ஞானதீபன், நெல்லியடி மத்தி ம. வி, குலசிங்கம்-ரஜனிகாந்தன், இமையாணன் அ. த. க. பா.

ஆண்டு 12 / 13

சீனிவாசகன் - அஜெந்தன், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.

### பருத்தித்துறைக் கோட்டம்:

ஆண்டு 6

சுந்தரலிங்கம்-பகீரதன் ஹாட்லிக்கல்லூரி, செந்தில்வேல்-ஜெயகாந், ஹாட்லிக்கல்லூரி.

ஆண்டு 7

சண்முகநாதன்- ஜனகன், ஹாட்லிக் கல்லூரி, ஜயக்கொடி- சரவணபவன், ஹாட்லிக் கல்லூரி, அரியலிங்கம்-சுதாபரன், ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு-8

குழந்தைவடிவேல்-செல்வக்குமார், ஹாட்லிக் கல்லூரி, கந்தையா-கமல்ராஜ், ஹாட்லிக் கல்லூரி, தர்மலிங்கம்-ராகவன், ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 9

சிவநாதன்- ரவிஷங்கர், ஹாட்லிக் கல்லூரி, தர்மராசா-சிறீனிவாசன், ஹாட்லிக் கல்லூரி, ஜெகநாதன்-வாசுதேவன், ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு 10

செல்வகணேசபிள்ளை-வத்சலன், ஹாட்லிக் கல்லூரி, ஜெகசிங்கம் மரியசில் இன்பராஜன், ஹாட்லிக் கல்லூரி, அருள்ஞானம் யூட்லெஸ்ரர் ரெுனி, ஹாட்லிக் கல்லூரி, கிருத்திகா - சின்னத்தம்பி, மெதடிஸ்த பெண்கள் உ. பா,

ஆண்டு 11

நடராசா - சந்திரகாசன், ஹாட்லிக் கல்லூரி, ஜெயந்தன்-ஜெயதாஸ், ஹாட்லிக் கல்லூரி, ஜெயதாஸ்- அமுதன், ஹாட்லிக் கல்லூரி.

ஆண்டு . 12/13

சிவப்பிரகாசம்-விஜயபாலன், ஹாட்லிக் கல்லூரி, பழனிவேல்-ரகுராம், சிதம்பராக் கல்லூரி. சிவசுப்பிரமணியம் - சிவசோதி, ஹாட்லிக் கல்லூரி.

### சண்டிலிப்பாய் கோட்டம்

ஆண்டு—7

குணரத்தினம் ஜெயப்பிரகாஸ் சண்டிலிப்பாய் இந்து ம. வி.

ஆண்டு 8

சுமித்திரா கனகரத்தினம் சண்டிலிப்பாய் இந்து ம. வி. இராசரத்தினம் திலீபன் சுதுமலை சிந்மயபாரதி வி. ஏகாம்பரநாதன் தினேஸ்சங்கர் சுதுமலை சிந்மயபாரதி வி.

ஆண்டு 9

மரியநாயகம் டஸ்ரன் வசீகரன் இளவாலை புனித ஹென்றியரசர், இரத்தினம் தயாளன் சண்டிலிப்பாய் இந்து ம. வி. பரமசிவம் தர்சினி நவாலி மகா வித்தியாலயம்

ஆண்டு 10

மகேஸ்வரன் குகராஜன் நவாலி மகாவித்தியாலயம். வரப்பிரகாசன் செல்றரன் யேசுராஜ் பிரகாஸ் இளவாலை புனித ஹென்றியரசர், அல்பிரட் அன்ரூ பிரபாகரன் இளவாலை புனித ஹென்றியரசர், மூத்ததம்பி பாலேந்திரன் நவாலி மகா வித்தியாலயம்

ஆண்டு 11

சாருகா பொன்னுத்துரை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மகாதேவன் சிவசேயன் புனித ஹென்றியரசர் கல்லூரி, அனுசூயா சிங்கராசா ஆனைக்கோட்டை ரே. க. பா.

ஆண்டு-12-13

ஆனந்தன் லோகேஸ்வரன் மானிப்பாய் இந்துக் கல்லூரி, கணேசநாதன் சிறினிவாசன் புனித ஹென்றியரசர் கல்லூரி. செல்வராசா கபிலன் புனித ஹென்றியரசர் கல்லூரி

### சாவகச்சேரி கோட்டம்

ஆண்டு-6

குமாரசாமி சர்மா ரகுராம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பிரியா ஆலாலசுந்தரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பொன்னம்பலம் விநோத் அல்லாரை அ. த. க. பா.

ஆண்டு—7

தயாதேவி தங்கராசா மட்டுவில் சரஸ்வதி க. வி. வித்யகாரணி சிவானந்தன் மட்டுவில சரஸ்வதி க. வி. அபிராமி இராசதுரை சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ஆண்டு.8

செந்தீபா வேலுப்பிள்ளை அல்லாரை அ. த. க. வித்தி, வாணி ஜெயக்குமார் சாவ. இந்துக் கல்லூரி, குகதாசன் தயாளன் சாவ. இந்துக் கல்லூரி

ஆண்டு 9

கருணநிதி பிரதீபன் சாவ. இந்துக் கல்லூரி, கைலைநாதன் சஞ்சீவன் சாவ. இந்துக் கல்லூரி, கையிலாயபிள்ளை பிரபாகரன் அல்லாரை அ. த. க. வித்தி.

ஆண்டு 10

ஆலாலசுந்தரம் செந்தூரன் சாவ. இந்துக் கல்லூரி, தில்லைநாதன் அரவிந்தன் சாவ. இந்துக் கல்லூரி, சந்திரமௌலீசன் ஜெயபாலன் சாவ. இந்துக் கல்லூரி,

ஆண்டு—11

துரைசிங்கம் வர்ணராஜ் சாவ. இந்துக் கல்லூரி, ஜெகமாலினி பவானந்தசிவம் சாவ. இந்துக்கல்லூரி, பிரேமலதா பஞ்சாட்சரம் சாவ. இந்துக் கல்லூரி

ஆண்டு 12/13

நவரட்ணராஜா மஞ்சுதன் சாவ . இந்துக் கல்லூரி

### கோப்பாய் கோட்டம்

ஆண்டு 6

கலைவாணி குலசேகரம், நிரஞ்சனி தியாகராசா, ருக்மினிதேவி- விஸ்வலிங்கம் நீர்வேலி ரே. க. பாடசாலை.

ஆண்டு 7

ஆறுமுகம் நிஷாந்தன் ஆவரங்கால் நடராஜா இராம

(5ம் பக்கம் பார்க்க)

## காய்ச்சலால் சிறுமி மரணம்

(நெல்லியடி)

பத்துநாள் காய்ச்சலினுல் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் அண்மையில் யாழ் போதனு வைத்தியசாலையில் மரணமானுர்.

பொற்பதி குடத்தனையைச் சேர்ந்த மரியதுரை வாகினி (வயது 6) என்னும் சிறுமியே மரணமாகியவராவர். (160)

## நெல் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை கொள்வனவு செய்வதற்காக நெல் வாணிபத் துறையினரால 7 000 சாக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது

இச்சாக்குகள் அப்பகுதி சகலவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு அவ்வப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக விவசாயிகளுக்கு விநியோகம செய்யப்படடுவருகின்றது.

அத்துடன் ஒட்டுசுட்டான் வட்டத்தில 3500 மூடைநெல்லும் நெடுங்கேணி வட்டத்தில் 600 மூடை நெல்லும் அரிசி ஆலைகளினுல் கொள்வனவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## விதை தானிய விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வட தமிழீழம் முழுவதும் பசுமை வேளாமை சேவைநிலையங்கள் மூலம் விவசாய மக்களுக்கு வயல் நிலச் செய்கைக்கு வேண்டிய விதை தானியங்களாகிய குரக்கன், உழுந்து கச்சான் ஆகியவை தாராளமாக விநியோகம் செய்யப்படுகிறது.

அத்துடன் சிறுதானிய உற்பத்திக்கு ஊக்குவிப்புக் கொடுக்கும் முகமாக விவசாயிகளுக்கு விவசாய ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் உற்பத்தியாகும் தானியங்களையும் நியாய விலையில் கொள்வனவு செய்ய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

# 4-ம் கட்ட பேச்சுக்குச் சென்ற அரசுக்குழு மீது அதிருப்தி

(கொழும்பு)

நாலாம் கட்டப் பேச்சில் அரச குழுவில் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட மற்றும் திரு. சாள்ஸ் அபயசேகரா இடம்பெற்றதற்கு பொ. ச. மு. அரசுக்குள் கடும் அதிருப்தி நிலவுகிறது.

பொ. ச. மு அரசில் அங்கம் வகிக்கும் 'மஃபரி குறூப்' எனப்படும் கம்பஹா மாவட்ட எம். பி. உபாலி குணரட்ண, தென்பகுதி எம். பி.யான சமல் ராஜபக்ச தலைமையிலான இந்தக் குழுவே இதற்கு அதிருப்தி தெரிவித்துள்ளது.

இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் மலையகத்தைச் சேர்ந்த எம். பி. ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; அரச குழுவில் அங்கம் வகித்த முக்கியமானவர்கள் கொழும்பு திரும்பிய பின் இவர்கள் யாழ்ப்பாணத்தில் நின்று எதைப்பற்றி கதைத்தார்கள் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை பொ. ச. மு.வில் அங்கம் வகிக்கும் பல எம். பி.க்கள் பலாலியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு புலிகளே காரணம் என நம்புகின்றனராம். சி

# தியாகி அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவாக இன்று உண்ணாவிரதம் நடைபெறும் இடங்கள் வருமாறு; நீர்வேலி கந்தசாமி கோவிலடி, சித்தங்கேணி பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயில், மயிலணி முருகமூர்த்தி கோவிலடி' முஸ்லீம் வட்டாரம் யாழ்ப்பாணம் இத்தாவில் குஞ்சு அறிவகம் கச்சாய் அம்மன் கோவில். மதுவன் ச,ச நிலையம். மீசாலை கிழக்கு' கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் உடுப்பிட்டிச்சந்தி பொதுப்பந்தல் அல்வொலலை இளைஞர் ச ச நிலைய முன்றல் அல்- மாலிச் சந்திப்பிள்ளையார் கோவிலடி. யாழ் கன்னுதிட்டி காளி கோவில் முன்றல். மாசியப்பிட்டி இரட்டையப்புலம் வைரவ கோயில் முன்றல், ம

# செலான் வங்கிக் கொள்ளையில் தமிழ் இளைஞருக்குத் தொடர்பு

## விசாரணை நடைபெறுகிறது

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற செலான் வங்கிக் கொள்ளையில் தமிழ் இளைஞர்கள் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்ற கருத்தில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று 'சிலுமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

முதலில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ஒரு தமிழ் அமைப்பைச் சேர்ந்த மூன்று இளைஞர்களிடம் இது பற்றி துருவித்துருவி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அந்தப் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் இயங்கிவரும் அந்தத் தமிழ் அமைப்பைச் சேர்ந்த மேலும் பல இளைஞர்களும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

விசாரணை செய்ததில், போதுமான தகவல்கள் கிடைக்காதபடியால், விசாரணை ஒரு மந்த நிலையில் செல்வதாக அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார் என்று 'சிலுமின' பத்திரிகை மேலும் தெரிவித்தது. ம-சி

# பாரிஸ் மாநாட்டை கருதியே அரசு தடைகளைத் தளர்த்தியது

(கொழும்பு)

பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி சந்திரிகா வடபகுதி மீதான பொருளாதாரத் தடையையும், மீன்பிடித் தடையையும் நீக்க முன்வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 27ம், 28ம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் சமாதான சூழ்நிலையையே முதலீடாகப் பயன்படுத்திப் பெருமளவு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இந்த இலக்கை நோக்கமாகக் கொண்டே மூன்றுமாத காலமாக தேக்க நிலையிலிருந்த பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசு அக்கறை காட்டியது. அதற்கு முன்னர் பேச்சுவார்த்தைகளில் முறிவு ஏற்படக்கூடாது என்பதாலேயே பொருளாதாரத் தடைகளையும் பெருமளவில் தளர்த்த அரசு இணங்கியது. அரசின் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளும் காலமறிந்து காலக்கெடு விதித்தனர் என்று கருதப்படுகிறது.

ஏற்கனவே தளர்த்தப்பட்ட பொருட்களை வடபகுதிக்குக் கொண்டு செல்வதில் பல தடைகள் உள்ளன. இவற்றை இராணுவத்தினர் வடபகுதிக்குள் கொண்டு செல்ல அனுமதிப்பதில்லை. இதனால் தடைத் தளர்வுகள் வெறும் பெயரளவில் மட்டுமே இருக்குமெனக் கருதப்படுகிறது. சி

அன்னை பூபதி நினைவாக

# நகை தொழிலாளர் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் 7ம ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு யாழ். மாவட்ட நகைத்தொழிலாளர் சங்கம் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டது.

யாழ்ப்பாணம் கன்னுதிட்டி காளிகோவில் முன்றலில் நேற்றுக் காலை 7மணிக்கு ஆரம்பமானது இவ் அடையாள உண்ணாவிரதத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல நகைத் தொழிலாளர்கள் உட்பட நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இவ் உண்ணாவிரதத்தின் போது இடையிடையே அஞ்சலி உரைகளும் எழுச்சிப் பாடல்களும் இடம்பெற்றன. -162

# தியாகி அன்னை பூபதி நினைவுதின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவுதின நிகழ்ச்சிகள் இன்று 18ம் திகதி பின்வரும் வட்டங்களில் காலை 7-00 மணிக்கு ஆரம்பமாகும்.

வலி. வடக்கு வட்டத்தில் பாஷையூர், புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சங்க, சனசமூக நிலையத்திற்கு அருகாமையிலும், வலி. வடக்கு வட்டத்தில் அராலி சரஸ்வதி மத்திய மகாவித்தியாலயத்திலும், வடமராட்சி வடக்கு வட்டத்தில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியிலும், வடமராட்சி கிழக்கு வட்டத்தில் மாமுனை அ. த. க. பாடசாலையிலும் நடைபெறும். நாளை 19ம் திகதி அன்னை பூபதியின் 7ம் ஆண்டு இறுதி நாள் பொதுக்கூட்டம் மாலை 7-00மணிக்கு மாமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் கடற்புலிகளின் யாழ், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சிலம்பரசன் தலைமையில் ஆரம்பமாகும்.

இப்பொதுக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களின் உரையைத் தொடர்ந்து 'சதியை வென்ற சாவுகள்' என்னும் நாடகமும் இடம்பெறும்.

## விசர்நாய்

2-ம் பக்கத் தொடர்ச்சி

தொண்டையில் உள்ள தசைநார்கள் தளர்ச்சியுற்று உணவு அல்லது நீரோ அருந்தமுடியாத நிலை ஏற்படுகின்றது.

### நீரைக் கண்டு அச்சம்

நோய் கண்டவர் நீரைக் கண்டதும் அஞ்சுவதாலேயே இந்நோயை "ஹைட்ரோ போபியா' என்பர். கழுத்து வாய் ஆகிய மேற்பகுதிகளில் விசர்நாய் கடித்தால் விரைவிலேயே நோய் காண்கின்றது.

விசர்நாய் கடித்த உடனேயே கடிபட்ட பகுதியைச் சுத்தம் செய்யவேண்டும். மூன்று தினங்களுக்குள் ஊசி போட ஆரம்பித்தல் அவசியம். அத்துடன் ஐந்து தினங்கள் நாயைக் கண்காணியுங்கள். இந்தக் காலப்பகுதிக்குள் நாய் இறக்கவில்லையென்றால் உறுதியுடன் டாக்டர்களின் ஆலோசனையின்படி சிகிச்சையை நீக்கிவிடலாம். இல்லையேல் சிகிச்சையை கவனமாக தொடரவேண்டும்.

தொகுப்பு: மணிசேகரன்

## தடை நீக்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதற்கான வர்த்தமானி பிரகடனம் இன்னமும் வெளியாகவில்லை. ஆனால் இராணுவத்தினர் தடைநீக்கப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் கொள்கலன்களில் மட்டும எரிபொருள் கொண்டு செல்வதற்கு படையினர் அனுமதி வழங்கியிருந்தனர். வெகு விரைவில் பவுசர்களிலும், வாகனங்களிலும் எரிபொருள்களை எடுத்துச்செல்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வோம் என்று வவுனியா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ம-இ

# அன்னை பூபதி பொது

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லிங்க, ஆனந்தகிருஷ்ணன்- தணிகைக்குமரன் ஆவரங்கால் நடராஜா இராம

ஆண்டு 8

மாணிக்கன் - வசந்தராஜா சிறுப்பிட்டி அ. த. க. பா. தயாராணி - ஸ்ரீபராபரன் ஆவரங்கால் நடராஜாஇராம வரதலிங்கம் - செல்வ மகிந்தன் ஆவரங்கால் நடராஜா இராம

ஆண்டு 9

குமாரசாமி - கானமூர்த்தி வாதரவத்தை விக்கினேஸ்வரா வி. ஜெயா - செல்லத்துரை வாதரவத்தை விக்கினேஸ்வரா வி.

ஆண்டு 10

வேலுப்பிள்ளை - இராகுலன் செல்வரத்தினம் - நந்தகுமார் புத்தூர் சோமஸ்கந்தாகல்லூரி செல்லத்துரை - சபேசன் கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரி

ஆண்டு 11

சிவசுப்பிரமணியம் சிவசக்திகுமார் வாதரவத்தை விக்னேஸ்வரா வி

ஆண்டு 11

விஜிதா நாகராஜன் மகாஜனக் கல்லூரி, தயாளினி தேவராசன் இளவாலை மெய்கண்டான் ம, வி-, வைத்தீஸ்வரன் கிரிதர் மகாஜனக் கல்லூரி

ஆண்டு 12/13

கெங்காதரன் இந்திரமோகன், சச்சிதானந்தம் சஞ்சயன் யூனியன் கல்லூரி, கணபதிப்பிள்ளை கோகிலன் மகாஜனக் கல்லூரி.

## பளைக் கல்விக் கோட்டம்

ஆண்டு 6

சந்திரசேகரன் - திவாகர் பளை மத்திய கல்லூரி

ஆண்டு 7

இதயராஜன் - இதயரூபன் பளை மத்திய கல்லூரி

ஆண்டு 8

கந்தசாமி - பிரபாகரன் பளை மத்திய கல்லூரி, வைத்திலிங்கம்-ரஜனிகாந்தன் இயக்கச்சி அ. த. க. பா, ஜினோதினி - தர்மகுலசிங்கம் சோரன்பற்று சி. சி. த. க. பா.

ஆண்டு 9

சரிதா - இரத்தினசிங்கம் வேம்பொடுகேணி சி. சி. த. க யாழினி-இராஜரட்ணம் பளை மத்திய கல்லூரி, சிவபாதம் - பளை மத்திய கல்லூரி

ஆண்டு 11

காசிப்பிள்ளை - நிர்ஜனன் துஷ்யந்தி சிவசம்பு பளை மத்திய கல்லூரி, சின்னத்துரை - பாலேந்திரன் இயக்கச்சி அ. த. க.. பா.

ஆண்டு 12/13

மகாலிங்கம் - சாந்தீபன் தியாகராஜா-சுஜீவன், வேலுப்பிள்ளை தவச்செல்வன் பளை மத்திய கல்லூரி.

## தெல்லிப்பழை கோட்டம்

ஆண்டு 6

காயத்திரி சிற்சபேசலிங்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பொன்ராசா கேதாரன், இரத்தினம் சியாமளன் மகாஜனக் கல்லூரி,

ஆண்டு 7

சிவஞானசுந்தரம் ஆரூரன் மகாஜனக் கல்லூரி. பிரியதர்சினி அருளானநதம் மல்லாவாகம் மகா வித்தியாலயம், சண்முகராசா நிர்மலன் மகாஜனக் கல்லூரி,

ஆண்டு 8

சிவராஜா இராஜபுத்திரன், இரட்னேஸ்வரன் குமரன் யூனியன் கல்லூரி. யேசுராஜா ஜெரால்ட் குளமங்கால் றோ. க. த. க. பா.

ஆண்டு 9

ஆனந்தராசா சாயிராம் யூனியன் கல்லூரி, மணியம் மயூரன் வசாவிளான் மத்திய ம. வி., முருகதாசன் மயூராஜ் மகாஜனக் கல்லூரி.

ஆண்டு 10

சிவபாலரத்தினம் சிவரூபன் மகாஜனக் கல்லூரி, சிவனேசன் பிரபாகரன் யூனியன் கல்லூரி, வைத்தீஸ்வரன் சாரங்கன் மகாஜனக் கல்லூரி

## வடக்கு - கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

மீளக்குடியேற்றத்துக்கான கொடுப்பனவு, தற்காலிக-நிரந்தரஇருப்பிடங்களுக்கான கொடுப்பனவு, தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நன்கொடை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் என்பன புனர்வாழ்வுத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுமென்று பிரஸ்தாப அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. வி-இ

யாழ். வணிகர் கழகம்

## அன்னை பூபதி நினைவுநாள்

அன்னைபூபதி நினைவு நாளையொட்டி கன்னுதிட்டி காளிகோவிலடியில் இன்று நடைபெறும் அடையாள உண்ணாவிரதத்தில் சகல யாழ் வணிக நிலைய உரிமையாளர்களும், வணிக ஊழியர்களும் பங்கு பற்றும் முகமாக இன்று யாழ்நகர்குளிர்பான தேநீர்ச்சாலை உட்பட சகல வணிக நிலையங்களும் முழுமையாக மூடப்பட்டிருக்கும் என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம். அத்துடன் அன்னை பூபதி நினைவு நாளாகிய 19-4-95ம் திகதி வர்த்தக விடுமுறை தினமாகும்.

நன்றி

(எ-4881) யாழ். வணிகர் கழகம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

# கிழக்கில் ஒப்பந்தம் உதாசீனம்

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் பொருளாதாரத் தடையை முற்றாக அமுல்படுத்தவில்லை. ஆயுத-வெடிப் பொருட்கள், யூரியா போன்றவற்றுக்கே தடை விதிக்கப்பட்டது. ஆனால் தற்போது அங்கு பிரகடனப்படுத்தப்படாத பொருளாதாரத் தடையை இராணுவம் அமுல்படுத்தி வருகின்றது. இதனால் பொதுமக்கள் அங்கு பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகி வருகின்றனர். சோதனைச் சாவடிகளில் உணவுப் பொருட்களையும, அத்தியாவசியப் பொருட்களையும் இராணுவத்தினர் பொதுமக்களிடம் இருந்து பறித்தெடுத்து விடுகின்றனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் எமது தேசியத் தலைவருக்கும், 'ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பின்பு, இந்த ஒப்பந்தம் வடபகுதியில் மட்டுமே அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் இந்த ஒப்பந்தம் படையினரால் உதாசீனப்படுத்தப்பட்டே வருகின்றது. மோதல் நடைபெற்ற காலங்களில் இராணுவத்தினர் எவ்வாறு அங்கு செயற்பட்டார்களோ, அதேபோன்று தான் தற்போதும் தான்தோன்றித்தனமாக நடந்து வருகின்றனர்.

## ஆத்திரமூட்டும் செயல்கள்

புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப் தலைமையில் இந்த முஸ்லிம் குடியேற்றம் மிகவேகமாகநடைபெற்று வருகின்றது. சிங்கள - முஸ்லீம் மககள் மீளக்குடியேறுவதற்கு, மேற்படி அமைச்சு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து அனுமதி வழங்கிவருகிறது, ஆனால், தமிழர் மீளக்குடியேற வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே இருந்து துன்பப்படுகின்றார்கள்.

அம்பாறை மாவட்டத்தில், முஸ்லிம்களின் கெடுபிடியால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள் தமிழ் மக்களின் கிராமங்களை தற்போது முஸ்லீம்கள் ஆக்கிரமித்து முஸ்லிம் பெயர்களையும் சூட்டிவருகின்றார்கள்.

இதுபோன்றுதான் 1985-ம் ஆண்டு திம்புவில் பேச்சுக்கள் நடைபெற்றபோது பத்தாயிரம் சிங்கள மக்களை குடியேற்றி அதற்கு தனியான ஒரு உதவி அரசாங்க பிரிவையும் ஏற்படுத்தினார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் தற்போது முஸ்லிம் அமைச்சர்களின் கெடுபிடிகள் அதிகரித்து வருகின்றது. தொழில் ரீதியில் பெருமளவு முஸ்லிம்களை அமர்த்துவது கிழக்கு மாகாணப்பல்கலைக்கழகத்தை வேறு இடத்துக்கு மாற்றுவது போன்ற நடவடிக்கைகளில் முஸ்லிம் அமைச்சர்கள் ஈடுபட்டுவருகின்றார்கள்.

இப்படியான ஆத்திர மூட்டும் செயல்கள் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து நடைபெற்று வருவதினால் மீண்டும் ஒரு மோதலை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசும், இராணுவமும் செயல்பட்டு வருகின்றது, என்று திரு. கரிகாலன் கூறினார்.

வி இ

# போரினால் 19 பேருக்கு ஒருவர் அகதியாகினர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் இலங்கையின் சனத்தொகையின் பதினேழு பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் அகதியாகி உள்ளனர் என்று 'லங்ககா தீப பத்திரிகை தமது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

'லங்காதீப' இதுபற்றி மேலும் தெரிவிப்பதாவது: இந்த நாட்டில் 12 வருடங்கள் 144 மாதங்கள் இடம் பெற்ற இந்த யுத்தத்தினால் யாருக்கு என்ன புயன் கிடைத்தது. எவருக்குமே இதில் வெற்றி கிடைக்கவில்லை. சில தனிப்பட்டவர்கள் அரசியலில் அதிகாரம் செலுத்தவும் செல்வங்களை சேர்க்கவும்' புகழ் பெறவும், உயர்ந்த பதவிகளை பெறுவதற்குமே இந்த யுத்தம் உதவியாக இருந்தது. ஆனால் நாட்டைப் பொறுத்த மட்டில் ஒரு பெரும் பின்னடைவு நிலை தான் ஏற்பட்டது.

யுத்தத்தினால் ஒவ்வொரு வினாடியும் இலங்கையின் வருமானத்தில் 48, 257 ரூபா விரயம் செய்யப்படுகின்றது. அது மாததிரமன்று. இந்த யுத்தத்தினால் வடக்கு கிழக்கு அபிவிருத்திகள் தடைப்பட்டன.

ம இ

## மீனவர் மீது படையினர் தாக்கு

[மன்னார்)

சிறிலங்கா கடற்படையினர் மன்னார் மாவட்ட சிலாபத்துறை கடற்பரப்பில் தொழிலுக்கு போகும் மீனவரை அடித்து துன்புறுத்துவதோடு துப்பாக்கி பிரயோகம் செய்வதாகவும் அங்கிகிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஸ்ரீமாவோ நினைவு முத்திரை

(கொழும்பு)

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று 79வது வயதைக் கொண்டாடினார் இவரைக் கௌரவிக்கும் முகமாக இரண்டு ரூபா பெறுமதியான முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தமுத்திரையை நேற்றுக் காலை வெளியிட்டு வைத்தார்.

ம

## தவறிவிட்டது

(யாழ்ப்பாணம்)

மாட்டுவண்டிச் சவாரிச்சங்கத்தினால் பாவிக்கப்பட்டுவரும் பண அறவீட்டுக்கான பற்றுச்சீட்டுப் புத்தகம் அச்சுவேலி-வல்லை வீதி -மண்டான் வீதிக்கும் இடையில் கடந்த 15ம் திகதி பி. ப. தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் அல்லது மாட்டுவண்டிச் சவாரி நடைபெறும் இடத்தில் ஒப்படைக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## தெரிவுக் குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இம்மாதம் பாரிஸில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டம் அடுத்த மாதம் 11ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற இருந்த தெரிவுக் குழுக் கூட்டத்தில், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தனது யோசனைகளைச் சமர்ப்பிக்க இருந்தது குறிப்பிடத்தக்கது.

ம இ

# புலிகளை வெல்ல வேண்டுமானால் ராணுவத்தின் போர் முறையில் மாற்றம் செய்ய வேண்டும்

## இராணுவ ஆய்வாளர் கூறுகிறார்

[கொழும்ப]

இலங்கை இராணுவத்தின் போர் முறைகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்படவேண்டும். கொரில்லாப் போரை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியே இராணுவத்திற்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இராணுவ ஆய்வாளர் ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்தப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இலங்கை இராணுவத்தினர் மரபுவழிப் போா முறைகளிலேயே பயிற்சி பெற்று வருகின்றனர். அதற்குரிய இராணுவ ஆயுதங்களையும், உபகரணங்களையுமே கொள்வனவு செய்தும் வருகின்றனர். எமக்கு மரபுவழிப் போா முறை தேவையில்லை. எமககு வேறு நாடுகளுடன் தொடர்புடைய நில எல்லைகள் கிடையாது.

இந்தியா எமது அண்டை நாடு அதுவும் கடலால் பிரிக்கப்பட்டுள்ளது. இநதியாவுடன் போர் புரியும் சாத்தியம் எதுவும் எமக்கு இல்லை. இந்த நிலையில் எதற்காக நாம் மரபுவழிப்போர்முறைகளில்பயிற்சி பெறவேண்டும்?

1971ம் ஆண்டு இந்த நாட்டில் ஜே. வி. பி. கிளர்ச்சி ஏற்பட்டது. அதனை அடக்குவதற்குத் தேவைப்பட்டது கொரில்லாப் போர்முறையே. விடுதலைப் புலிகளுடனும் அத்தகைய கொ்ல்லாப போர் முறை ஒன்றையே மேற்கொள்ளவேண்டி இருந்தது.

இப்படியான நிலையில் மரபுவழிப் போர்முறைகளில் இராணுவத்திற்குப் பயிற்சி அளிப்பதும், அதற்குத் தேவையான ஆயுதங்களையும், உபகரணங்களையும் கோடிக்கணக்கில் இறக்குமதி செய்வதிலும் என்ன பயன்?

விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் வெற்றிகொள்ள வேண்டுமானால், கெரில்லாப் போர் முறைகளிலேயே அதற்குப் பயிற்சி வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இ

## ஐக்கிய அரபுக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேசமயம் வீட்டுப் பணிப் பெண்ணாக கடமைபுரிந்த பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் மணி ஒருவர் மீதும் தமது முதலாளியைக் கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டு வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது. தான குற்றவாளி இல்லை யென்று அந்தப பெண் மணி தெரிவித்துள்ளார்.

ம இ

## அன்னை பூபதி

[1ம் பக்கத தொடர்ச்சி

வலிகாமம் கோட்டத்தில் நல்லூரர் சட்டநாதர் கோவில் வீதியிலுள்ள இளங்கலைஞா மண்டபத்திலும் தென்மராட்சி கோட்டத்தில சிட்டிபுரம் அம்மன்கோயில் முன்றலிலும் வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார் கோயில் முன்றலிலும் நடைபெறவுள்ளன.

## பிரிகேடியரின்

(1ம பக்கத் தொடர்சசி)

கூறினார். குறிப்பிட்ட சோதனைச் சாவடியில் நின்ற இராணுவத்தினர் அந்தக் கைக்குணடை கைப்பற்றவில்லை இதனால் அந்தச் சோதனைச் சாவடியில் நின்ற இராணுவத்தினர் அனைவரும் பிரிகேடியரின் தண்டனைக்கு ஆளானார்கள்.

## கிழக்கில்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

சமாதானத்தை விரும்புவதாகத் தெரியவில்லை அது யுத்தத்தையே விருப்புவதாகத் தெரிகின்றது.

மோதல் தவிர்ப்ப ஒப்பந்தம் அமுலில்இருக்கும் இவ்வேளையிலும், கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் குடியேற்றங்களையும் அரசு மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக, மகாவலி வலய பிரதேசத்தில் அரசாங்கம் மிகவேகமாக வீடுகளைக் கட்டி சிங்கள மக்களைக் குடியேற்றிவருகின்றது. எல்லைப் பகுதிகளில் முஸ்லிம்களைக் குடியேற்றுகின்றது. ரஹிகல்ல என்ற கிராமத்தில் அண்மையில் 300 முஸ்லிம் குடும்பங்களை அரசு குடியேற்றியுள்ளது

# யுத்தம் நடைபெறுததால் அரசுக்கு 5,000 கோடி ரூ. மீதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தினால் வடக்கு-கிழக்கு யுத்தம் இடம் பெறுதினால அரசாங்கத்திற்கு கடந்த இரண்டு மாத காலத்திலும் 5000 கோடி ரூபா மீதமாகியுள்ளது என்று 'சிலுமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுபற்றி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது: இந்த யுத்தத்துக்கு ஒரு வருடத்தில் ஏற்படும் செலவுகளுக்கு 1, 41 65 பேருக்குவருடாந்தம் 20, 000 ரூபா வீதம் சம்பளம் கொடுத்து வேலை வாய்ப்புக் கொடுக்கலாம்.

5,20. 833 குடும்பங்களுக்கு ஒருவருக்கு 2000 ரூபா வீதம இரண்டு வருடங்களுக்கு நிவாணம் கொடுக்கவும் ஒரு வருடத்துக்குரிய யுத்தசெலவு போதுமானது என்றும் சிலுமின' மேலும் தெரிவித்தது.

# கினிகத்தேனயில் பஸ் விபத்து 18 பயணிகள் பலி

(கொழும்பு)

கினிகத்தனேயில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பஸ்விபத்தொன்றில் 18 பயணிகள் கொல்லப்பட்டனர். 22 பேர் படுகாயமடைந்தனர்.

சிவனொளிபாதமலைக்குஇந்த பஸ் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்றது.

பஸ்ஸில் ஏற்பட்ட தொழில் நுட்பகோளாறு ஒன்றின் காரணமாக பஸ் 500 அடி பள்ளத்தில் வீழ்ந்து இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இ

## 3-ம் ஈழப் போரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாடமாகும்.

பேச்சுவார்த்தைகளின் ஆபத்தும், கடின விளைவும் தெளிவாகத் தெரிகின்றது. கடுமையான கெரில்லா போராட்டத்துக்கு நெருக்குதலுக்கு உட்பட்டிருக்கும் ஒரு நாடு ஒரே நேரத்தில் ஆயுத பலத்திலும் உளவியல் பலத்திலும் தமது படைகளை வளர்க்க வேண்டும். ஆனால் துர்அதிஷ்டவசமாக ஸ்ரீலங்கா படைகள் இவ்விடயங்களில் மிக மெதுவாகவே வளர்கின்றன. படையினரின் கடந்த கால நடவடிக்கைகளை மீளாய்வு செய்ய வேண்டிய தருணம் இதுவேயாகும், மீண்டும் போர் தொடங்கிய பின்பு தனது படைகளின் கட்டமைப்புகளை திருத்திக் கொள்வதற்கு சுய விமர்சனத்துக்கு நேரம் கிடைக்காது.

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கும் சுட்டெண், நிலைய எண் பெற்ற தரம் சரியாக எழுதப்பட வேண்டும் ஒரு பாடத்துக்கான மீளாய்வுக் கட்டணம் 60 ரூபாவாகும்.

ஒரு பாடத்துக்கு ஒரு விண்ணப்பபத்திரமே சமர்ப்பிக்க வேண்டும். அதில் 60 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு விண்ணப்பதாரிகள் கையெழுத்து திகதியிட்டு செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர், பாட எண், நிலைய எண் குறிப்பிடப்பட வேண்டும். விணணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டுக்கிளை இலங்கை பரீட்சைத் திணைக்களம், கொழும்பு - 2 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

(ம - இ)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Liecence number B/1633613.